# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (07.09.2022 முதல் 11.09.2022 )

**அறிக்கை எண் 071/2022** **தேதி.06.09.2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (02.09.2022 முதல் 05.09.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 11.09.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02/09 | 03/09 | 04/09 | 05/09 | தேதி | நாள்-1 07/09 | நாள்-2 08/09 | நாள்-3 09/09 | நாள்-4 10/09 | நாள்-5 11/09 |
| 28.0 | 4.6 | 0.2 | 5.2 | மழை (மி.மீ) | 18 | 20 | 4 | 4 | 4 |
| 30 | 32 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 33 | 33 | 33 |
| 22 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 23 | 23 | 24 |
| 7 | 5 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 6 | 6 |
| 85 | 78 | 76 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 80 | 66 | 63 | 69 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 9 | 10 | 14 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 14 | 14 | 14 | 14 |
| 200 | 200 | 230 | 200 | காற்றுவீசும் திசை | 230 | 250 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (07.092022 முதல் 11.09.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின்

ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 07-09-2022 | 26 | 23 | 25 | 24 | 24 | 26 | 20 | 25 | 25 | 26 | 26 | 26 | 20 |
| 08-09-2022 | 29 | 25 | 31 | 24 | 27 | 31 | 19 | 29 | 29 | 28 | 32 | 28 | 18 |
| 09-09-2022 | 3 | 7 | 9 | 6 | 6 | 9 | 5 | 4 | 4 | 2 | 10 | 3 | 6 |
| 10-09-2022 | 0 | 0 | 2 | 0 | 0 | 3 | 0 | 0 | 0 | 0 | 4 | 0 | 0 |
| 11-09-2022 | 5 | 5 | 7 | 4 | 5 | 7 | 3 | 6 | 5 | 5 | 7 | 5 | 2 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழையுடன் காற்றின் வேகம் 8 – 16 கி.மீ வரை எதிர் பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு நீர்பாசனம் செய்வதனை ஒத்திவைக்க வேண்டும். உயரமான பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>கடந்த வார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி மானாவாரி கரிசல் நிலங்களை முன்பருவ விதைப்பிற்கு தயார் படுத்தவும். |
| பருத்தி | விதைப்பு | மண் ஈரப்பதத்தினை பயன்படுத்தி இறவையில் நடப்பட்ட குளிர் கால கம்போடியா பருத்தி மற்றும் மக்காச்சோளத்தில் அதிகப்படியான பயிர்களை களைந்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும். |
| கரும்பு | | காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட மற்றும் நடுபட்டங்களில் பயிரிடப்பட்ட கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கட்ட வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 8-16 கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும்.<br>ஓணம் பண்டிகைக்கான பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பின் வாழை மரங்களை தூருடன் வெட்டி சாய்த்து துண்டுகளாக்கி இயற்கை உரமாக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கால்நடைகள் | | மாடுகளை குளக்கரைகளில் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம்.<br>நிலவும் பருவகால வானிலை கோமாரி நோய் (கால் மற்றும் வாய்ச்சப்பை நோய் ) தாக்குதலுக்கு ஏற்றதாக காணப்படுவதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு அறிவுருத்தப்படுகிறார்கள்.<br>காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் கோழி மற்றும் மாட்டுத்தீவனங்களில் பூஞ்சாண நச்சு பாதிக்க வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் தீவனங்களை பரிசோதித்து நச்சு இல்லா நல்ல தீவனங்களைக் கொடுக்கவும். |

## குறுஞ்செய்தி

- ஓணம் பண்டிகைக்கான பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பின் வாழை மரங்களை தூருடன் வெட்டி சாய்த்து துண்டுகளாக்கி இயற்கை உரமாக்க வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**